Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } ஈரோடு, 3-2-1945 தை-மீ 21உ } மலர் 17

## என்? யார்?

சரித்திரப்பிரியர் என்பவருக்குத்
தோழர் அன்பழகன் பி. ஏ, (ஆனர்ஸ்) தந்த பதில்

ஆரிய திராவிட விவகாரத்தின் உண்மைதான் என்ன? என்று கேட்டு பதங்களைப்பற்றிய ஆராய்ச்சியில், இறங்குகின்றார் சரித்திரப் பிரியர். எந்த பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் நால் வகைச் சாதியை வற்புறுத்தும் அந்த இந்துமதத்தின் ஒரு முக்கிய அம்சமாகிய சமரச சன்மார்க்கம் இடம் பெறுவதற்காக பழைய சாதிச் சண்டைகளோடு, புதிய ஆரிய திராவிடப் பூசல்களையும் இணைப்பிடும் ரீதியில் சரித்திரப் பாடம் கற்பிப்பதும், இந்து முகம்மதியர் வேற்றுமையை வற்புறுத்தும் தோரணையில் சரித்திரம் எழுதுவதும் போதிப்பதும் பொதுவான துரோகமாகவே கருதப்படவேண்டும் என்று சரித்திரப்பிரியர் கூறுகின்றாரே, அந்தப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பார்ப்பனருக்குத் தனி தண்ணீர்ப்பானையும், பிறருக்குத் தனி தண்ணீர்ப் பானையும் இருப்பானேன்? ஆரியர் நீர் உண்ண ஒரு குவளையும், திராவிடருக்கு வேறொரு குவளையும் இருப்பானேன்? நீரினை ஊற்ற பார்ப்பனரே நியமிக்கப்படுவானேன்? கல்லூரி உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்கென தனியுணவு விடுதி இருப்பதேன்? மடைத் தொழிலுக்கு பார்ப்பனர்களையே அமைக்கும் முறையைக் கைக்கொண்டிருப்பதேன்? தமிழ் நாட்டுக் குருகுலத்தில் பார்ப்பனப் பிள்ளைகளும், பிறரும் ஒன்றாக உட்கார்ந்துண்ண (தேசியப் பார்ப்பான்) வ. வே. சு. ஐயர் மறுத்ததேன்? [illegible] இலைச் [illegible] பாததேன்? அதற்குத் துணையாக உலகத் தலைவர் (சகத்குரு) சங்கராச்சாரி முதல், பட்டம்தாங்கி, பல் கலை விற்பன்னராக விளம்பரம் பெற்ற பார்ப்பனத் தலைவர்களை உள்ளிட்டு, ஆங்கில நாட்டுக்குச் சென்று, ஆட்டு நாக்குச் சுவையுணர்ந்து, வெள்ளி நாக்குப் படைத்து மன்னனை வலம்வரும் மதிப்பினைப் பெற்றுத் திரும்பிய வலங்கைமான் வயோதிகர் வரையில் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நாடிமுத்து அவைச் சாடத்தலைப்பட்டதேன்? இன்னும் பார்ப்பனீயம், பிற இனத்திடம் அதிகாரப்பிச்சை ஏற்றாவது, இழிவினை மறந்து முகத்தினை துணியினால் மூடிக்கொண்டாவது தனியாக உண்ண நாவினைக் குழைப்பதேன்? பெருவாரியான சத்திரங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம், பார்ப்பனர்களுக்கு மட்டும் உணவளிக்கத் திராவிடர்களைக்கொண்டு (செட்டி நாட்டு வணிகரும் வேளாளரும்) கட்டச்செய்திருப்பதேன்? மிகுதியுள்ள சத்திரங்களிலும் பார்ப்பனருக்கு முதல் வரிசையும் [பந்தி] பிறருக்குப் பின்னும் என்ற [illegible] இருப்பதேன்? படைக்கு முந்திக் கொள்ள வேண்டிய இனம், பந்தியில் முதலிடம் பெறுவது முறையல்ல என்ற முடிவுகொண்டதாலா? 'பிராமண போசனப்பிரியா' என்ற தொடர் தமிழகத்திலே பிரசாரம் செய்யப்பட்டதாலா? இவை என் காரணமானாலும் இவற்றை விட பார்ப்பனருக்கு உணவளிப்பது, தானஞ்செய்வது, கொடுப்பது யாவும் மோக்ஷ கதிக்கு நல்ல யத்திற்கும் செல்லச் செலவழிக்க வேண்டிய முறை என்ற கருத்து ஆரியரால் பரப்பப்பட்டதால் என்பதை மறுக்க முடியுமா? சிற்றுண்டிச்சாலைகளில் பார்ப்பனருக்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருப்பதும், பார்ப்பனர் நடத்துவதே உயர்வு தாழ்வு என்ற எண்ணமிருப்பதும், பார்ப்பனர்களுக்கு மட்டும் என்று நடத்தப்பெறுவதும் எதனால்?

பார்ப்பனர்கள் குடியிருப்பதற்கென்றே ஊருக்கு ஓர் அக்ரஹாரம் (அக்ரமஹாரம்) இருப்பதேன்? வேறுசில இடங்களிலும் பார்ப்பனர் குடியுள்ள வீட்டில் பார்ப்பனரே குடிவைக்கப்படுவதேன்? பார்ப்பனத்தெரு வழியே பன்றியும், நாயும் நடக்கலாம்; பறையரும், புலையரும் நடக்கக்கூடாது என்ற கட்டாயமேன்? பார்ப்பனர்களுடைய கிணற்றிலும், குளத்திலும், மாடுகளும் குதிரைகளும் நீருண்ணலாம்; மக்களினத்திலேயே தோன்றிய பிற திராவிட மக்கள், அந்த நீரைப் பயன்படுத்த உரிமை பெறாததேன்? சில பொதுக் குளங்களிலும், ஆறுகளிலும் பார்ப்பனப் படிக்கட்டு என்று தனித் துறை கட்டப்பட்டிருப்பதேன்? [அது மட்டுமல்ல] அந்த செத்துச் சுண்ணாம்பாகி அதுவும் நெருப்பிலே வெந்து நீறாகும் மண்ணோடு மண்ணாய் மடியும், பிணங்களிலே கூட வேற்றுமைப் பாராட்டி, பார்ப்பனப் பிணங்களுக்குத் தனிச் சுடுகாடு கட்டிக்கொண்டிருப்பதேனோ? நாற்றப் பிணங்கூட குலப் பெருமையைக் காப்பாற்றத் தனியிடம் கேட்கின்றதே! இது முறையா!

தெருவில் நடக்கும் பார்ப்பனனும், பார்ப்பனத்தியும் எதிரே [illegible] 'வீட் [illegible]

கே வந்தாட்டியே கட்டடலே போறவனே! அண்டா ஒனக்கு! இந்தத் திமிறு?, கலியோன்னா?' என்று ஏசிப்பேசி பூச்சாண்டியைத் தூக்குவது போலக் குதிக்கின்றனரே!, இது முறைதானா? ஆரியம் திராவிடத்தைப் பூச்சாண்டியாக்கியது இவ்வகையிலன்றோ!

தென்னாப்பிரிக்காவிலே துயரத்திற்குள்ளானார்கள் தென்னிந்திய மக்கள் பலரும் என்று வெள்ளையருக்கும், பழுப்பு நிறத்தவருக்கும் ஏற்பட்ட சச்சரவைப் பெரிதாகப் பேசும் இந்நாட்டுப் பார்ப்பன அன்பர்கள், கடல்கடந்து காணும் அதே காட்சிகளே இந்நாட்டிலும் இருந்தும் அவைகளைக் காண மறுப்பதேனோ? காண நேரிடினும் கண்டதை மறைப்பானேன்? கயவராக வாழ்வது நினைவுக்கு ஊரமளிப்பதேன்?

'ஆரியர்களுக்கும் முன்பே (ஆரியர்கள் வருவதற்கு முன்னால்) கோவில்களைக்கட்டிக் கடவுள் வழிபாடு செய்தவர்கள் திராவிடர்கள் என்று சரித்திரம் சொல்லுகிறது' என்று சொல்கிறார் சரித்திராசிரியர். ஆம் உண்மையே, ஒப்புக்கொள்கிறோம். ஆரியர்கள், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நாட்டில் நுழைய ஆரம்பித்தனர். (கால அளவுக்கு ஆதாரம், பல்லவர் வரலாறும், ஆந்திர நாட்டு வரலாறும், தமிழக வரலாறும் ஆகும்). அதற்கு முன்பே கோயில் இருந்தன என்பது உண்மை. ஆனால் கோயில்கள் தற்காலக் கோயில்கள் போலல்ல. தற்காலக் கோயில்களில் திராவிடர்களும், திருவிடநாட்டு வேந்தர்களும் கட்டிய கோவில்களிலே வீணர்கள் ஆட்சி பெற்றிருப்பதேனோ? திராவிடர்கள் அக்கோவில்களில் இழிவு படுத்தப்படுவதேன்? பழங்குடி மக்கள் பார்ப்பதற்கும், நுழைவதற்கும் தடையிருப்பதேன்? பார்ப்பனரல்லாதார், மூலத்தானத்திற்குச்செல்ல மறுக்கப்படுவதும், பார்ப்பனரே அதற்கு உரியர் என்ற நிலையும் ஏன்? திருவண்ணாமலையில் வழக்கு ஏற்பட வேண்டிய நிலை ஏன்? கோவிலிலே கடவுள் வழிபாட்டைச் செய்யவும், அந்தப் பேசாத பெருமானைத் தொடவும் கழுவவும் பார்ப்பனர்களே அமைக்கப்படுவது ஏன்? அத்தொழில் (பூசனைப் பாத்தியமாக) மகன் வழிமுறையாகக் கையாளப்படுவதேனோ? கோவில்கள், நால்வகை வேதத்திற்கும் வடமொழி உறுப்போடுதற்கும் இடமானதேன்? தமிழர்களின் மொழி அவண் இடம் பெறாததேன்? வேத ஆகமங்கள் கெட்டுருச்செய்யாத பார்ப்பனர் கூட கோவில் குருக்களாகக் காட்சி யளிக்கவிட்டிருப்பதேன்? இந்நாட்டு சைவ அன்பர்கள், சித்தாந்த அறிவு பெற்றவர்களே சிவ வழிபாட்டிற்குரியர் என்று பல காலமாகக் கூறி வந்தும்; சுமார்த்தப் பார்ப்பனர்கள் நீக்கப்படாததேன்? தமிழைப் போலவே மலையாளமும், தெலுங்கும், கன்னடமும் கடவுளுக்குகந்த மொழியாக அமையாததேன்? வேதத்தின் ஊழல்கள் விளக்கப்பட்டதன் பின்பும் சாத்திரங்களின் கொடுமையும், ஸ்மிருதிகளின் கொடுமையும் கண்டிக்கப்பட்டதன் பின்பும் ஆவலைக்கூட்டும் மொழி உதவப்படுவதன்றி சைவர்களின் தேவாரம், திருவாசகமோ, அன்றி வைணவர்களின் திருவாய்மொழியோ இடம் பெறாததேன்? ஒரு சில இடங்களில்(கர்ப்பக்கிருஹம்)மூலத்தானம் அவனிற்கு கல்லாலும், மண்ணாலும்; மரத்தாலும் கட்டப்பட்டிருந்தன. ஐந்நூறாண்டுகளுக்கு மேல் நிலைக்கமுடியாத நிலையினவாயிருந்தன. ஒரு அடையாளம் போன்ற கடவுட்சிலை இருந்தது கருத்தினை இருத்துவதற்காக. பிறகாலத்திலே அவை வளர்ந்த விதம் கோவில்கள், கோபுரங்கள் பலவற்றைப் பெற்று, சுற்று வீதிகள் பலவற்றையும், சுற்று மதில்கள் பலவற்றையும் பெற்று கடவுளர்கள் பலவாக்கப்பட்டு, கடவுளர் வாகனங்கள் பற்பலவாக்கப்பட்டு, தேர்களும் பல்லக்கும் பலவாகச் செய்யப்பட்டு, நாடோறும் திருமுழுக்கும் திருவிழாவும் நடத்தப்பெற்று இன்றைய நிலையிலே பார்ப்பனர்கள் வாழ்வுக்கு வழியாகவும், பிறர் வயிற்றுக்குப் பழியாகவும், பொருள் நிரம்பிய தொழிற்கூடமாகவும், பொருளற்ற புன்தொழிலுக்கு இடமாகவும் மாறிவிட்டன. காந்தியார் நல்லவரு இருந்த ஒரு காலத்தில் தெரிவித்ததுபோல் கூத்திகளின் குடியிருப்பாகவும், திருத்துகாதர் வெறுத்ததுபோல கயவர்களின் குகைகளாகவும், நமிகள் ஊரகம் வெறுத்த வேறுத்த விக்கிரகங்களின் அக்கிரம ஆட்டச்சாலைகளாகவும்; பெருந்தகை நெல்லை கா. சு. பிள்ளை எம்.ஏ., எம்.எல்., அவர்கள் கூறியதுபோல தமிழ்க் கலைவாணர்களின் புற்றில் ஆரிய (சுமார்த்த) நச்சரவு குடிகொண்டு விட்டதற்குப் பாழ்நிலமாகவும், தோழர் சி. எம். இராமச்சந்திரனார் கூறியது போல அழுக்குகளின் இருப்பிடமாகவும் அமைந்திருப்பனவே தற்காலக் கோவில்கள்.

அவை இடம் பெறினும், வடமொழிக்கு முதலிடம் என்ற முறை வைத்திருப்பதேன்? இவை தவிர்த்து வைணவர்களின் பார்ப்பன வட கலையினர், தென் கலைத் தமிழர்களை தாழ்வாக மதிப்பதேன்? கோவில்களில் திருநீறு அளிப்பதானாலும், திருத்துழாய் அளிப்பதானாலும், பார்ப்பனர்களுக்கு முதலில் அளித்துப்பிறகே பிறருக்கு [கோயில் தலைவராக இருப்பினும்] என்ற நிலையேன்? இவையெல்லாம் இறைவிருப்பமா? இறைவிருப்பமானால் அதை கடவுளர் என்று கூறுவதின் அறியாமை தான் என்னே! எந்நாட்டவர்க்கும் இறைவனாக இருக்கவேண்டியவன், ஒரு குலத்தார்க்கும், அவரது மொழிக்கும், கலைக்கும், வயிற்றுக்கும் வளமும், பிறருக்கு வறுமையும் அளிக்கத் துணை செய்வதானால் அவ்விறைவின் சிறுமைதான் என்னே! குங்குமமும், சாந்தும் அளிக்கும் போதும், வைணவர் கோவில்களில் இறைமுடி தரிக்கச்செய்யும் போதும் பார்ப்பனப் பெண்களாயினும்; அவரும் மங்கலமிழந்த வெள்ளுடைக்காரராயினும், அவர்களுக்கு முதலிடந்தருவதும், பிறரெல்லாம் பின்னரே அதற்குரியராவதும் எதனால்?

கூட்டவும், பெருக்கவும், தூக்கவும், இறக்கவும் சில திராவிடர்கள் கோயிலில் இருப்பது தவிர, உழைத்தார்களுக்கு உழைத்து அலுப்பதற்கு உரிமையிருப்பது தவிர, தேரினை இழுப்பதற்கும், பல்லக்கிலே பார்ப்பனர்களும் வீற்றிருக்கத் தூக்குவதற்குமன்றி, கோவிலிலே திராவிடருக்குள்ள இடம்யாது?

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## தாராசுரத்தில் பெரியார்

16-1-45-ந் தேதி காலை தாராசுரம் புகை வண்டி நிலையத்திலிருந்து பெரியார் அவர்கள் சாரட்டில் வைத்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழி நெடுக மக்கள் பெரியாருக்குப் பூ மாலையிட்டு தங்கள் உணர்ச்சியைக் காட்டிக் கொண்டார்கள்.

தாராசுரம் கிழக்கெல்லையில் தோழர் சாமிநாதன் அவர்களின் வீட்டிற்கு முன் திராவிடர் கொடியைப் புலவர் தோழர் பெரியசாமி ஏற்றிவைத்தார். தமிழாசிரியர் என். எஸ். வரதானந்தம் அவர்களின் திராவிட பண்பு என்னும் பாடலுக்குப் பின், பெரியார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக ஆண்டு விழா ஆரம்பமாயிற்று. திராவிட நாட்டுப் படத்தை புலவர் பெரியசாமியும், பெரியார் படத்தை தாராசுரம் மிராசுதார் தோழர் ஆர். எஸ். பி. ராமையாவும் திறந்துவைத்தார்கள். தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னதம்பி, பி. ஆர். பொன்னுசாமி முதலியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

இடைவேளை விருந்துக்குப் பின் பிற்பகல் 3 மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர்கள் எஸ். தவமணி இராசன், நன்மதி, சுந்திரமூர்த்தி, ஜி. என். சாமி, பி. ஜனார்த்தனம்: பரபனாசம், நாகராஜன் பி. ஏ., பி. எல்., ஷம்சுதீன் முதலியவர்கள் பேசினார்கள். இறுதியில் பெரியார் அவர்கள் ஆரியர் திராவிடர் பிரச்சினையை விளக்கியும், ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் மத்தியில் கண்டிப்பாக ஒரு சுவர் எழுப்பித்தானாக வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பேசினார்கள்.

பின், இப்போது காலியாகவிருக்கும், கல்வி இலாக்கா டைரக்டர் பதவிக்கு வைஸ் சான்சலராகவிருக்கும் டாக்டர் சர் சி. ஆர். ரெட்டி, சர் ஏ. லெட்சுமணசாமி முதலியார், ரெத்தினசாமி ஆகிய மூவரில் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்றும், எக்காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை நியமிக்கக்கூடாதென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதென்றும், சில சுயநலப் பத்திரிகைகள் நம் கட்சியைப்பற்றி செய்துவரும் தப்புப் பிரசாரத்தையும், எழுத்து முறைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இரவு 9மணிக்கு ஆசிரியர் வரதானந்தம் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட குழுவினரால், இரணியன் அல்லது இணையற்றவீரன் என்ற நாடகம் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் மிக சிறப்பாக நடிக்கப்பட்டது. பெரியார் அவர்கள் நாடக மேடையில் சிறிதுநேரம் பேசினார்கள்.

தாராசுரம் தோழர் ஆர். எஸ். பி. ராமையா அவர்கள் ஆரம்பமுதல் இறுதி வரை எல்லாப் பொறுப்பும் ஏற்றுக்கொண்டு விழாவை வெற்றிகரமாக இனிது நடத்திக்கொடுத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## ராவ்பகதூர் டாக்டர் மதுரம் உருவச்சிலை

### 7-4-45ல் 2வது ஆண்டு நினைவுநாளில் திறப்புவிழா

திருச்சி ஜில்லாவின் சரித்திரத்தில் முக்கியமானவரும் வைத்திய உலகில் மேனாட்டாராலும் போற்றப்பட்டவருமான காலஞ்சென்ற ராவ்பகதூர் டாக்டர் ஏ. மதுரம் அவர்களின் சேவையைப் பாராட்டவும், அவர் பெயரால் நகரின் முக்கிய ரஸ்தா சந்திப்பு ஒன்றில் அவரது உருவச்சிலையை அமைக்கவும் ஆன ஏற்பாடுகள் துரிதமாய் செய்யப்பட்டு வருகின்றன.

7-4-45ந் தேதி அவர் காலஞ்சென்ற 2ம் ஆண்டு நினைவுநாளில் உருவச்சிலையை திறந்துவைப்பதென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மாகாணத்தின் பல பாகங்களிலுமுள்ள செல்வாக்குள்ள பிரமுகர்கள், அரசியல்-சமூக வேற்றுமையின்றி கமிட்டியின் அங்கம் வகிக்க பூர்ண அனுதாபத்துடனும், விருப்பத்துடனும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கமிட்டியில் மேலும் பலர் சேர்ந்து ஒத்துழைப்பதாக உறுதி கூறியிருப்பதுடன், அவர்களாலான சகலவிதமான உதவிகளை செய்வதாகவும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். கமிட்டியின் பூர்வாங்கக்கூட்டம், இடம், தேதி விரைவில் அறிவிக்கப்படும். இதுவரையுள்ள கமிட்டி அங்கத்தினர்கள் விபரமாவது:-

சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார்
குமாரராஜா சர். முத்தையாசெட்டியார்
சர். ஏ. லெட்சுமணசாமி முதலியார்
எஸ். முத்தையா முதலியார்
சர். பி. டி. ராஜன்
ராவ்பகதூர் ஏ. ஓய். அருளானந்தசாமி நாடார்
ராவ்பகதூர் என். ஆர். சாமியப்ப முதலியார் எம். எல். ஸி.
டாக்டர் ஏ. ஜோதி பாண்டியன்
புரபசர். எம். ரெத்தினசாமி
வி. எஸ். செங்கோடையா கோவை
ஆர். வி. லெட்சுமணய்யா நாயுடு கோவை
எஸ். ரீமைய செட்டியார், கோவை.
கே. வி. சீனிவாச அய்யங்கார் எம். எல். ஸி.
டாக்டர் ஜோசப் ஞானதிக்கம், திருச்சி
பி. ஆர். நாராயணசாமி அய்யர், திருச்சி
எஸ். கே. ரெத்தினசாமி பப்ளிக் பிராஸிகியூட்டர், திருச்சி
ராவ்சாஹிப் பி. பி. கிருஷ்ணசாமி ரெட்டியார், லால்குடி, திருச்சி.

கமிட்டியின் பூரா அங்கத்தினர்களின் பெயர் விபரங்கள் ஒரு வாரத்திற்குள் அறிவிக்கப்படவேண்டியதிருக்கிறபடியால், கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கும் பிரமுகர்கள், தங்கள் பதிலை சீக்கிரம் அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

டி. எம். முத்து கன்வீனர்,
(ஆசிரியர் "திராவிட மணி")

## அறிவிப்பு

தோழர்களே, பட்டம் பதவி நீக்கத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக Special Conferance மாநாடு நடத்தப்படும் வரை அதாவது மார்ச்சு மாதம் இறுதி வரையில் நம் கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கலாம். எனவே அன்பு கூர்ந்து சற்று சுறுசுறுப்பாக உறுப்பினர் சேர்த்தனுப்பத் தாழ்மையாய் வேண்டுவதுடன் கழகப் பெயரால் புத்தகம் வெளியிடவேண்டியிருப்பதால் இதுவரை தலைமை நிலையத்துக்குத் தெரிவித்தது போக மற்ற கழகங்களின் தலைவர், செயலாளர், நிர்வாகிகள் முதலியவர்களின் பெயர்களை உடனே எழுதியனுப்பக் கேட்டுக்கொள்கிறோம்.

தி. க. தலைமை நிலையம்,
ஈரோடு.

## சென்னை பார்க் டவுன் திராவிடர் கழகம்

29-1-45 மாலை 7 மணிக்கு தோழர் மு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம் நடைபெற்று, கீழ்கண்ட செயற்குழுவும், அங்கத்தினர்களுக்கு மாத சந்தாவானால் 2 அணா வீதமும், வருட சந்தாவானால் 1 ரூபாய் வீதமும் தீர்மானிக்கப் பற்றது. 1945-ம் வருட, புது ஆண்டிற்கு செயற்குழுவின் விபரம்:- தலைவர்: மயிலை ஜி. பார்த்தசாரதி, உபதலைவர்: ஏ. டி. ஏ. தமிழ் ஓவியன். செயலாளர்: கே. கோவிந்தசாமி, உதவி செயலாளர்: இளைய அண்ணல். ஆக இவர்கள் அடங்கிய 13 பேர்கள் கொண்ட ஓர் செயற்குழுவு, அமைக்கப் பெற்றது. சென்னை 15-வது, 16-வது வட்டங்களுக்கு இக்கழகத்தின் சார்பாக சென்னை ஜில்லா மத்திய கழகத்திற்கு தோழர்கள் மயிலை ஜி. பார்த்தசாரதி, கே. கோவிந்தசாமி, சாம்பசிவம், எம். ஆறுமுகம் ஆகியவர்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

# எங்கள் மகத்தான வெளியீடு

(1) எங்கள் பெரியார் வாழ்க!
(2) திராவிடநாடு திராவிடருக்கே!

என்னும் அச்சில் பொறிக்கப்பட்ட ரப்பர் ஸ்டாம்பு சொற்பமே கைவசமுள்ளது.

ஒன்றின்விலை ரூ. 1-4-0

முன்பணமாக அனுப்புவோர்க்கு தபால்செலவின்றி அனுப்பப்படும்.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்குபசார், வேலூர். (N. A.)

## கோவையில் திராவிட எழுத்தாளர் மகாநாடு கூட்ட ஏற்பாடு

தோழர்களே!

எழுதுகிறவர்கள் எல்லாம் எழுத்தாளிகளா? படிக்கிறவர்கள் எல்லாம் படிப்பாளிகளா? அதுதான் இல்லை. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துக்குப் பின், புதுமையைச் சித்தரிப்பவன் எழுத்தாளி; பகுத்தறிவு நூல்களைப்படிப்பவன் படிப்பாளி, அதன்பிரகாரம் நடப்பவன் அறிவாளி, என்ற புதுயுகம் உண்டாகிவிட்டது.

எழுதுகிறவர்கள் எழுத்தாளியானால் கணக்கெழுதும் கணக்குப்பிள்ளைகள் கூட எழுத்தாளிகள்தான்!

அந்தோ! 'நவீனம்' 'புதுமை' 'மறுமலர்ச்சி' என்று சக்திகளைப்பற்றி எழுதுகிறார்கள்!

ஒரு மகா பெரிய கவி! அவர் பெயர் உங்களுக்குத் தெரிந்திருக்கும். காளிபோல சக்தியைக் கம்பீரமாக வருணிக்கிறார். இதனால் என்ன பயன்? படிப்பவர் உள்ளம் பயங்காளித்தனத்திற்காளாகும். மற்றொருவர் தேவிகளைப் பற்றிக் கவிதை எழுதுகிறார். அந்த தேவியைக் கண்ணால் கண்டாரோ? நாம் அறியோம்!

கட்டுரையாளர்கள்! இவர்கள் புதுப் புது கடவுள்களைப் போற்றி வருகிறார்கள். 'சாயிபாபா'வுக்கு சலுகை காட்டுவதிலே நேரம் கழிகிறது! இதுதான் கலையா?

காதல்! இதைப் பற்றி எல்லாக் கட்டுரையாளரும் அலசுகின்றனர். இக்கட்டுரையாளர்கள் எவரேனும் சீர்திருத்த மணம் செய்திருக்கிறார்களா? செய்யாவிட்டால் கவலை இல்லை. நம் இயக்கத்தில் செய்திருக்கும் அன்பர்களையும் கேலி செய்கின்றனர்.

இயக்க அன்பர்களே!

உண்மையில் சொல்லும் செயலும் ஒன்றாய் நிற்கும் ஒரு கூட்டம் இருக்குமானால் அவர்கள் சுயமரியாதைக்காரர்கள்தான்!

நாம் நினைத்தால் எக்காரியத்தையும் சாதிக்க முடியும். ஆதரவு இல்லையே என்ற கவலை வேண்டாம்!

முன்காலத்தில் ஊருக்கு "ஒரு கோவில் வேண்டும்" என்ற பழமொழி. ஆனால் இக்காலத்தில் "ஊருக்கு ஒரு சுயமரியாதைக்காரன் இருந்தால் போதும்" அவன் அந்த ஊரை சீர்திருத்தி விடுவான் என்ற நம்பிக்கை இருக்கிறது. சாதித்தும் வருகின்றோம்!

ஆங்காங்குள்ள திராவிட கழகத்தின் சார்பில் எழுத்தாளர்களே! ஒன்று திரண்டு வாருங்கள். புதுயுக வளர்ச்சிக்கு உங்கள் பொன்போன்ற எண்ணத்தை எழுதுங்கள். மாநாட்டின் வெற்றிக்கு அறிஞர் பலர் ஆதரவு கொடுத்திருக்கின்றனர். இக்கூட்டம் [illegible] திராவிடர்களே புறப்பட ஆயத்தமாய் இருங்கள் கோவையை நோக்கி!

தேதி முதலியன பின்னர் அறிவிக்கப்படும்.

பண்டிட் ஜெய்லாணி,
செயலாளர்,
முகாம்: மேட்டுப்பாளையம்.

## இராமநாதபுரம் மாவட்ட முதலாவது திராவிடர் கழக மகாநாடு

### ஆலோசனைக்கூட்டம்

21-1-45ந் தேதி காரைக்குடி திராவிடர் கழகக் கட்டிடத்தில் இராமநாதபுரம் மாவட்ட முதலாவது திராவிடர் கழக மாநாட்டின் ஆலோசனைக்கூட்டம் தோழர் எஸ். அருணாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் வரவேற்புக்கழகத்திற்குத் தோழர்கள் இமயவரம்பன் தலைவராகவும், சி. பெரி. சி. மெய்யப்பன், அர். நாராயணசாமி, சின்னத்துரை, க. சிதம்பரம் முதலியவர்கள் காரியதரிசிகளாகவும், எஸ். அருணாசலம், எஸ். இராமநாதன் ஆகியவர்கள் பொருப்பாளர்களாகவும், ராம. சுப்பையா, நா. இராமசாமி முதலியவர்கள் விளம்பர அதிகாரிகளாகவும் தேம்மாப்பட்டு ஆசிரியர் முருகையா தொண்டர்படைத் தலைவராகவும், ராம. வீரப்பன், சே. வாசு ஆகியவர்கள் தொண்டர்படைத் தலைவர்களாகவும் மற்றும் பலதோழர்கள் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

மேற்படி மாநாட்டை பிப்ரவரி மாத இறுதியில் காரைக்குடியில் நடத்துவதென்றும், மாநாட்டிற்குத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை, புரட்சிக் கவி பாரதிதாசன், அறிஞர் எஸ். இராமநாதன், இயக்கத் தளபதிகளான டி. சண்முகம். டி. பி. வேதாசலம் முதலியவர்களையும், மாணவ மணிகளான தோழர்கள் ஜனார்த்தனம், அன்பழகன், செஞ்செழியன் முதலியவர்களையும் வரவழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டுத் தேதி முதலிய விவரம் பின்னர் வெளிவரும்.

### முக்கிய வேண்டுகோள்

இராமநாதபுரம் மாவட்டத் தோழர்களே! நமது மாவட்ட முதலாவது திராவிடர் கழக மாநாடு காரைக்குடியில், பிப்ரவரி இறுதியில் நடத்துவதற்கு, வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டதில், இன்னும் நமது மாவட்டத்திலுள்ள ஆர்வமிக்க பல தோழர்களையும் சேர்த்துக் கொள்வதென்ற தீர்மானப்படி சேர விரும்பும் ஆர்வமுள்ள தோழர்கள், தங்கள் தங்கள் பெயர்களை பிப்ரவரி மாதம் 10-ந் தேதிக்குள் வரவேற்புக் கமிட்டி காரியாலயம், திராவிடர் கழகம், காரைக்குடி என்ற முகவரிக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ராம. சுப்பையா,
நா. இராமசாமி,
விளம்பர அதிகாரிகள்.

## தமிழ்நாடு ரடிகல் டெமாக்கரட்டிக் கட்சி

இந்தியத் தொழிலாளர் சம்மேளனம் பொதுக் காரியதரிசி தோழர் வி. பி. கார்னிக் பிப்ரவரி மாதப் பிற்பகுதியில் இம்மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வார். தமிழ்நாட்டில் பல முக்கிய நகரங்களுக்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த மாதம் இரண்டாவது வாரம் ஆரம்பத்தில் சென்னைக்கு வருவார்.

## தோழர் எஸ். பி. மீனாட்சியம்மாள்

திருச்சி திராவிட மாணவர் மாநாட்டிற்கு சொற்பொழிவாற்ற, 17, 18-2-45-ந் தேதிகளில் திருச்சிக்கு சென்றுவிட்டு இயக்கத் தோழர்களின் அழைப்பிற்கிணங்கி 20-2-45-ந் தேதி முதல் ஒரு வாரத்திற்கு நீலகிரி, ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து இயக்கப் பிரசாரம் செய்வார்.

## சென்னை நகர திராவிடர் கழகம்

மேற்படி கழகத்தின் நிர்வாகக் கமிட்டி தேர்தல் கூட்டம் ஒன்று 30-1-45 மாலை வாயர்சின்னதம்பி முதலி தெரு 4-A. எண்ணுள்ள மாடியில் தலைவர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னையின் எல்லா டிவிஷன்களிலிருந்தும், 58 முக்கியஸ்தர்கள் வந்திருந்தனர்.

ஒவ்வொரு வட்டத்திற்கும் 2 பிரதிநிதிகள் வீதம் நகர கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் 1945-ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: டி. சண்முகம், துணைத் தலைவர்கள்: டி. எம். பார்த்தசாரதி, எ. டி. எஸ். சாமி பி. எ., பி. எல்., டாக்டர் இருதயராதன், சத்யவாணி முத்து. பொதுக் காரியதரிசி: என். வி. நடராசன். கூட்டுக் காரியதரிசிகள்: என். எம். சுப்ரமண்யம், சி. கணேசம், சி. தங்கராஜ், எம். எஸ். மூகையதீன். பொருள்காப்பாளர்: கே. கோவிந்தசாமி. சென்னைத் தொகுதிக்கு 40 வட்டங்களுக்கும் சுமார் 90 பேர்கள் நகர கழகத்தின் கமிட்டி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அடுத்தபடியாக சென்னை மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாட்டை மார்ச்சுமாதக்கடைசியில்நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டு தோழர் பாரிஸ்டர் எஸ். ஜி. ரங்காராமாநுஜம் அவர்களைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக் கமிட்டி ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திராவிட நடிகர் கமிட்டியை மாநாட்டுக்குப் பின்னர் தேர்ந்தெடுப்பதென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, மேற்படி கமிட்டிக் கூட்டம் இரவு 9½ மணிக்கு இனிது முடிவுற்றது.

## திருவாரூரில் ஆரியன் கோபுரக் கும்பாபிஷேகம்

### வாரியாருக்குத் தடையுத்தரவு!

திருவாரூர் தியாகராச சாமி கோவில் ஆரியன் கோபுரக் கும்பாபிஷேகம் 4-2-45-ல் நடத்துவதாகவும் அதற்கு கிருபானந்தவாரியார் முதலிய பிரச்சாரகர்களை அழைப்பதென்றும் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் திட்டம் போட்டு நடப்பதை மறுக்கும் முறையில் திருவாரூர் திராவிடர் இன எழுச்சிக் கூட்டங்கள் 29-1-45 முதல் 4-2-45 வரை நடத்தவும், 4-2-45 அன்று கருப்புக் கொடிகளுடன் யானை, குதிரை, வாத்தியங்கள் முழங்க தங்கள் எதிர்ப்பைக் காட்டிக்கொள்ள மகத்தான ஊர்வலம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. கோயில் எக்ஸிகியூடிவ் ஆபீஸர் பாண்டியம் பிள்ளை அவர்களும், உள்துறைப் பஞ்சாயத்தார் ராவ்பகதூர் வி. எஸ். தியாகராச முதலியார் அவர்களும் நாகை சப்கலெக்டர் அவர்களிடம் மேற்படி கூட்டங்களுக்குத் தடையுத்தரவு கோரினர். நாகை சப்கலெக்டர் முன்னிலையில் தோழர் வி. ஜி. ரெங்கராசு அவர்கள் கும்பாபிஷேகத்தின் கொடுமைகளைப் பற்றியும், திராவிடர் கிளர்ச்சியின் நோக்கத்தைப் பற்றியும் விளக்கியதின் பேரில், 3,4-2-45 தேதிகளில் திராவிடர் கூட்டங்களை மட்டும் நிறுத்தும்படியாகவும், கருப்பு கொடி எதிர்ப்பு வேண்டாமென்றும் சப்கலெக்டர் கூறியதோடுகூட கோவிலார், கிருபானந்தவாரியாரையும்; நாகர்கோயில் பண்டித பூஷணம் ஆறுமுகம் பிள்ளையையும் கூட்டத்திற்கு அழைக்கக் கூடாதென்றும் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

1945-ஆம் ஆண்டு
யுத்தத்தின் தோற்றம்

★

பெரும்போர்கள்
மகத்தான இரத்தவெள்ளம்
எண்ணற்ற போர்க்கைதிகள்

★

எனவே,
செஞ்சிலுவை சங்கம், எப்பொழுதையும்விட
உங்கள் உதவியை நாடுகிறது.
"செஞ்சிலுவை"
என்று குறிப்பிட்டு
மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு
உடனே பணம்கொடுத்துதவுங்கள்

## ஈரோட்டில் இன்னிசைக் கச்சேரி

கோவை மாவட்டத் திராவிடர் கழகத்தின் நிதிக்காக இன்னிசைக் கச்சேரி ஒன்று இம் மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தேதி முதலிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பி. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

## "புது உலகம்"

தமிழ்நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சியின் சார்பில் "புதுஉலகம்" என்ற வாரப் பத்திரிகையை வெளியிட இந்திய சர்க்காரின் அனுமதி கிடைத்திருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் பத்திரிகையை வெளியிட துரிதமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று காரியதரிசி தோழர் டி. ஆர். நடராஜன் தெரிவிக்கிறார்.

குடி அரசு

1945ௗ பிப்ரவரி மீ 3ௗ

# திராவிட மக்களே! அல்லாவிட்டால் பார்ப்பனரல்லாத மக்களே!!

திராவிடமக்களே! உங்களை நீங்கள் திராவிடமக்கள் என்று ஒப்புக்கொள்ள இஷ்டமில்லையானால் பார்ப்பனரல்லாத மக்கள் என்றாவது ஒப்புக்கொள்வீர்கள் என்று கருதித்தான் அல்லாவிட்டால் பார்ப்பனரல்லாத மக்களே என்று தலைப்பில் குறிப்பிட்டோம்.

இன்று சென்னைமாகாணத்தில் சமயத்திலும், சட்டத்திலும், சமுதாயத்திலும் நீங்கள் சூத்திரர்கள் என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறீர்களா இல்லையா!

குறிப்பிடப்பட்டிருப்பது மாத்திரமா? அந்தப்படியே பெரிதும் சூத்திரர்களாக நடத்தப்படுகிறீர்களா இல்லையா?

நீங்கள் திவான்பகதூர், சர், இராஜாசர், மகாராஜாசர், ஆனாலும் சமுதாயத்தில் 4-வது ஜாதியாகவும், கீழ் ஜாதியாகவும், சில இடங்களில் பார்ப்பன ஆணுக்கும் திராவிட மாதுக்கும் பிறந்த மக்களுக்கு இருக்கும் உரிமைகூட இல்லாமல், கோவில் குளம் முதலியவைகளில் பிரவேசிக்கக்கூடாதவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறீர்களா இல்லையா? சட்டம் சமயம் சமுதாயம் ஆகிய மூன்றிலும் தாழ்த்தி இழிவு படுத்தப்பட்ட நீங்கள் பன்னெடுங்காலமாய் இந்த இழிவை அனுபவித்துக்கொண்டு பணம் திரட்டுவதையும் பட்டம் பெறுவதையும், பதவி அடைவதையுமே பெரிதான பேறாகக்கொண்டு பேதையாய் வாழ்ந்துவருகிறீர்களே தவிர உங்கள் பகுத்தறிவு இந்த இழிவை நீக்கிக்கொள்ள சிறிதுகூட முயற்சிக்கும்படி தூண்டவில்லையே இதற்கு என்ன காரணம்?

பணம் பட்டம் பதவி படைத்த நீங்களே இந்த இழிவை நீக்கிக்கொள்ளவேண்டிய கவலையோ மான உணர்ச்சியோ இல்லாமல் சமயத்திற்கும், (இந்து மதத்திற்கும்) சமுதாயத்திற்கும், (பார்ப்பனர்களுக்கும்) சட்டத்திற்கும், (சர்க்காருக்கும்) அடிமையாகப் போட்டி போடுவீர்களேயானால் இனி சாதாரண மக்களுக்கு மான உணர்ச்சி எப்படி வர முடியும்?

"சோத்துக்கில்லாதவன் சொன்னபடியெல்லாம் கேட்பான்"

"பசிவந்திடப் பத்தும் பறந்து போம்"

என்றெல்லாம் பழமொழி உண்டு. அதாவது "ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் நல்லபடியான மார்க்கம் இல்லாதவன் மனிதத் தன்மையோடோ, மானத்தோடோ, நாணயத்தோடோ வாழமுடியாது. ஆதலால் அப்படிப்பட்ட மக்களிடம் ஜாக்கிரதையாய்ப் பழக வேண்டும்" என்பதற்கு ஆக இம்மாதிரி பழமொழி பயன்பட்டு வருகிறது.

ஆனால் பணம் படைத்தவர்களும், பணம் பெருகும்படி பட்டம் பெற்றவர்களும், குவியும்படி பதவி பெற்றவர்களும், மானம் பற்றிய கவலை இல்லாமல், இழிவையும் ஈனத்தையும் பற்றி வெட்கப்படாமல் வாழ்க்கை நடத்திக்கொண்டு போவதென்றால் இந்தக் கூட்டம் சமுதாயத்திற்கே கேடான கூட்டம் என்று சொன்னால் அது எப்படித் தவறாகும்.

இந்து சமயமும் பார்ப்பனரும் திராவிட மக்களை இழி பிறப்பு என்று கூறி, அவர்களுக்கு சமய ஆதாரத்தில் என்ன என்ன குணங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றனவோ அக்குணங்களுக்குப் பரம்பரை உரியார்கள் என்றும், தகுதியானவர்கள் என்றும், காட்டிக்கொண்டு சாக்ஷியாய் உருவாரமாய், இருக்கிறவர்களாகத்தானே, இழிவில் ஈனத்தில் கவலை இல்லாமல், தங்கள் பணம், பட்டம், பதவி ஆகியவைகளில் அதிகக் கவலைகொண்டிருப்பவர்களைக் கருதவேண்டும்?

இந்த 1945-ம் வருஷத்தில் தமிழ் நாட்டில் ஒரு கூட்டம் அதுவும் திராவிட மக்களில் இப்படி இருக்கிறார்கள் என்றால் இதற்கு எதை ஒப்பிடுவது?

திராவிடர் சரித்திரம் தென்பட்ட காலம் தொட்டு திராவிடர்களின் அரசர்முதல் ஆண்டிவரை இப்படியே அதாவது தங்கள் சமுதாய இழிவைப் பற்றிக் கவலையில்லாமல் மானத்தைப் பறிகொடுத்து தங்கள் சுயநலத்திலேயே கண் வைத்து வாழ்ந்து வந்ததாகவே பெரிதும் காணக்கிடக்கின்றன.

ஆதலால் இதற்குப் பரிகாரம் இந்தக் காலத்தில் தேடாவிட்டால் இனி எப்போதும் ஏற்படப் போவதில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதுவும் பணம், பட்டம், பதவி இவைகளில் பற்றில்லாத இவைகளைப் பற்றிய பாத்தியம் கொண்டிராத மக்கள் இளைஞர், நடுத்தரத்தார், முதியோர் ஆகியவர்கள் இந்த (திராவிட மக்களின்) இழிவை நீக்கவும் போக்கவும் முயற்சி செய்தால்தான் ஏதாவது பரிகாரம் ஏற்பட முடியும்.

பணம் படைத்தவன் பட்டம் பெறவும், பிறகு பதவி பெறவும் தான் பாடுபடுவான். இதுதான் பணம் படைப்பதின் இயற்கைப் பரிணாமமாகும். ஒருசமயம் இந்தப் பரிணாமத்தில் ஏதாவது மாறுதல் நடக்குமானால் அது (அதாவது பணம் படைத்தவன்) பட்டத்தை எதிர்பார்த்து பதவி பெற்றவனுடைய வாலைப் பிடிப்பதாகத் தான் இருக்கும். இதுபோலவே பட்டம் பெற்றவனும் பதவி பெற்றவன் வாலைப் பிடித்து மேலும் பட்டம் பெறவும் பதவியாளனுடையவோ அல்லது சர்க்காருடையவோ வாலைப் பிடித்துக் கொண்டு அவர்களுக்கு நல்ல பிள்ளையாகவோ தான் பாடுபடச் சொல்லும். அதுபோலவே பதவி பெற்றவனும் அப்பதவியில் கொள்ளையடித்துப் பணம் குவிக்கவோ தன் சந்ததிகளுக்குச் பட்டம், பதவி, பணம் சேர்க்கவோ, தானும் பாடையேறும் வரை பதவியில் புரளவோதான் பரிணாமம் கொண்டு செல்லும். இது இயற்கையின் நியதி. இந்த நியதியானது இம் மூன்று தன்மையார்களும் உலகில் உள்ள நம்பிக்கைத் துரோகமான நன்றியற்ற, நாணயமற்ற, ஒழுக்கமற்ற எல்லா குணங்களையும் தங்களுக்கே ஆக்கிக்கொள்ளச் செய்யும். அதில் எவருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை, அப்படி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 3-2-45ந் தேதி வரை 26256-அங்கத்தினர்கள் ரூ. 2707—0—0 சந்தா

பிப்ரவரி மாதம் 3ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 4479 | 9. வட ஆற்காடு | 1377 |
| 2. சேலம் | 4110 | 10. மதுரை | 1170 |
| 3. திருச்சி | 3701 | 11. செங்கல்பட்டு | 488 |
| 4. கோவை, உதகை. | 3518 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. திருநெல்வேலி | 1859 | 13. இலங்கை | 165 |
| 6. இராமநாதபுரம் | 1821 | 14 பெங்களூர் | 125 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென் ஆற்காடு | 1516 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 26256. சந்தா ரூ. 2707-0-0

---

யாருக்காவது, எந்தத் திராவிடருக்காவது சந்தேகமிருக்குமானால், அவர்கள் தங்கள் இனம் ஏன் இந்தக் காலத்திலும் இப்படி இழிவான நிலையில் இருக்கிறது என்பதற்குக் காரணங்களைத் தேடிக் கொண்டு போவார்களானால் சந்தேகம் தெளிந்துவிடும்.

உதாரணமாக மேற்கண்ட (பணம் பட்டம் பதவி) முத்தன்மையோருக்கு,

1. அவர்களது சமயம் எப்படிப்பட்டது.
2. அவர்களது சடங்குகள் எப்படிப்பட்டவை.
3. தர்மங்கள் எப்படிப்பட்டவை.
4. முயற்சிகள் எப்படிப்பட்டவை.
5. சாகவாசம் எப்படிப்பட்டவை.
6. கலை எப்படிப்பட்டவை.
7. பொது நாணயம் எப்படிப்பட்டவை
8. தங்கள் சமுதாயத்திற்குச் செய்யும் சேவை எப்படிப்பட்டவை.
9. அவர்களது வாழ்வில் அவர்களது பிறவி எத்தனை.

என்பனவாதிகளை சிந்தித்துப் பார்த்தால் விளங்கும்.

ஆனால் முஸ்லீம்களிலாவது, பார்ப்பனர்களிலாவது இப்படிப்பட்ட தன்மையர்கள் இவ்வளவு மோசமாக நடந்துகொள்ளுகிறார்களா?, பாருங்கள்.

பார்ப்பனர்களில் பணமும், பட்டமும், பதவியும் பெற்ற மக்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள்? அவர்களில்-ஐகோர்ட் ஜட்ஜி, ஜில்லா ஜட்ஜி, எக்ஸிகுட்டிவ் எஞ்சினீயர், கவர்ன்மெண்டு செக்ரட்டரி, கலெக்டர், அட்வகேட் ஜனரல் முதலிய உயர்பதவிகளில் இருந்து ரிடையர்டு ஆகி பென்ஷன் பெற்ற தோழர்கள் V. V. சீனிவாசய்யங்கார், பாஷ்யம் அய்யங்கார், K S ராமசாமி சாஸ்திரி, R. V. கிருஷ்ணய்யர், F. G. நடேசய்யர், P. S. சிவசாமி அய்யர், C. ராமானுஜாச்சாரி, ஸ்ரீனிவாசாச்சாரி, வெங்கிட்டராமசாஸ்திரி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், T. விஜயராகவாச்சாரி முதலியவர்களைப் பாருங்கள். சமய சமுதாய சம்மந்தமான பெருமித [illegible]ழுக்கங்களை விட்ட அவர்களது சில பிள்ளைகளையும் பாருங்கள். அவர்கள் தங்கள் நடத்தை எப்படி இருந்தாலும் எப்படிதங்கள் இனத்திற்கு ஆக பாடுபடுகிறார்கள்? என்று பாருங்கள்.

மற்றும் பார்ப்பனரில் பெரிய வக்கீல்களையும், சிறிய வக்கீல்களையும் எடுத்துக்கொள்ளுங்கள் அவர்கள் தங்கள் இனத்திற்கு ஆக எப்படிப் பாடுபடுகிறார்கள்?

மற்றும் பார்ப்பனர்களின் டாக்டர்களை எடுத்துக்கொள்ளுங்கள் அவர்கள் தங்கள் இனத்திற்கு ஆக எப்படிப் பாடுபடுகிறார்கள்?

மற்றும் பார்ப்பனர்களில் பெரு வியாபாரிகள் மில் ஓனர்கள், பெரும் கம்பெனிக்காரர் ஆகியவர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். இவர்களையெல்லாம் பார்த்துவிட்டு இத்துறையில் உள்ள நம் மக்களைத் திரும்பிப் பார்த்தால் இதுபோல் எந்த பென்ஷன் உத்தியோகஸ்தரை சொல்ல முடியும்? அல்லது எந்த வக்கீலை, எந்த டாக்டரை, எந்த மிராசுதாரை, எந்த 'மில் ஓனரை', எந்த ஜமீன்தாரரை, எந்த இராஜாவை, எந்த,—யாரை சொல்லமுடியும் என்று பெயர் காணுவது கஷ்டமாக இல்லையா? சேலத்தில் உள்ள ஒரு தோழர் ஆர். வி. கிருஷ்ணய்யர் என்பவர் அதிகாரத்தில் இருக்கும்வரை தன் இனத்திற்கு அவ்வதிகாரத்தில் என்ன என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவு நன்மையும் செய்து விட்டு மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கேடுகளையும் செய்து விட்டு பென்ஷன் வாங்கினதும் "பிராமணர்களின் உரிமையைக் காப்பாற்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த" ஆரம்பித்துவிட்டார்.

ஒரு சர். சி. பி. இராமசாமி அய்யர் ஒரு திவானாக இருந்துகொண்டு இனி பார்ப்பனர்களின் 10 தலை முறைக்குப் பாதுகாப்புத் தேட அங்கு பெரும் பெரும் திட்டம் போட்டுக்கொண்டு டாக்டர் அம்பேத்கருக்கும் பதில் சொல்லிக்கொண்டு இன்னும் என்ன என்னமோ செய்துகொண்டு இருக்கிறார். மற்றும் ஹைக்கோர்ட் ஜட்ஜுகள் இந்தக் காலத்தில் கூட இந்திய வர்ணாச்சிரம சுயராஜிய மகாநாடுகளைக் கூட்டித் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்புகிறார்கள். அதற்கு திராவிடர்கள் பணமும் கொடுத்து டெலிகேட்டுகள் காரியதரிசிகள், வரவேற்புக் கழகத் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். ஜில்லா ஜட்ஜுகள் இந்துமகா சபை மகாநாடுகள் கூட்டுகிறார்கள்.

அதற்கு திராவிடர்கள் தலைவர்கள், பிரதிநிதிகள், வரவேற்புக் கழகத் தலைவர்கள், திறப்பாளர்கள் முதலியவர்களாக இருக்கிறார்கள்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் திராவிடர்கள் எந்தத் துறையில் தான் ஆரியர்களுக்கு அடிமையில்லாமல் இருக்கிறார்கள் என்று யாராவது சொல்லுவதற்கு இடம் இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. அவ்வளவு ஏன்? காங்கிரஸ் என்பதை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் காங்கிரஸ் இலட்சியம் இராமராஜ்யம், வருணாச்சிரம பாதுகாப்பு (இவை காந்தியார் சொன்னதாகும். மற்றும் டாக்டர் ராஜன் பாஷ்யாச்சாரியார், சத்தியமூர்த்தி அய்யர் முதலியவர்கள் சொன்னதுமாகும்.) இப்படிப்பட்ட சபைக்கு சென்னை மாகாணத்தில் உள்ள அங்கத்தினர் பெரும்பாலோர் திராவிடர்கள் (அல்லது பார்ப்பனரல்லாதார்கள்) என்றால் மானாபிமானத்திற்கும், திராவிடர்களுக்கும் எத்தனை 'யோசனை' தூரம் என்று பாருங்கள்.

ஆகவே இந்நிலையைப்போக்க மானமுள்ள வாலிபர்களைத் தவிர வேறு யார் வெளிவரக்கூடும் என்றும் வேறு யாரை எதிர்பார்க்கக் கூடும் என்றும் கேட்கின்றோம்.

"சுதந்திர தினம்" (பார்ப்பன ஆதிக்க தினம்) கொண்டாட்டத்திற்குத் திராவிட மாணவன் சட்டம் மீறி ஜயிலுக்குப் போகிறார்கள், போலீசாரும் பிடித்துக் கொண்டுவந்து விரட்டிவிடுகிறார்கள்.

நம்மை இழிவுபடுத்தும் கதையை திராவிடக் கூத்தர்களே நடிக்கிறார்கள்? அதோடு இக் கூத்தர்களில் பலர் தங்களைத் திராவிடர் என்று சொல்லிக் கொள்ளவே கூச்சப்படுகிறார்கள்?

நம்மை இழிவுபடுத்தும் பாட்டைத் திராவிடர்களே பாடுகிறார்கள்; அதோடு இப் பாடகர்கள் சிலர் தங்களை ஆரியர்கள் என்கிறார்கள்.

இதைப் பார்க்கவும், கேட்கவும் மானமற்ற திராவிடர்கள் கூட்டம் கூட்டமாகப் போகிறார்கள் பணமும் கொடுக்கிறார்கள்.

உண்மையில் மானமுள்ள திராவிடனுக்கு இவைகளையாவது நடைபெறாமலே செய்ய வேண்டியது கடமையாகாதா? அப்படி இல்லாவிட்டாலும் பணம்கொடுத்துப் பார்க்கிறான் என்றால் இதற்கு எதை ஒப்பிடுவது என்பதற்கு வார்த்தை இல்லை.

வாலிபர்களே, திராவிட மக்கள் நிலை அதிலும் பணம் பட்டம் பதவியாளர்கள் நிலையும், பாடகன், கூத்தன், கலைவாணன் நிலையும் மிகமிக மோசமாகப் போகின்றது. இவர்கள் தவிர்த்த மற்ற படித்த திராவிடர்களில் அநேகம் பேர்களோ சமய சஞ்சீவிகளாக ஆகிவிட்டார்கள். ஆகிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே இவை திருந்தவும், புத்துலகமைக்கவும் உங்களால்தான் ஏதாவது வழி பிறந்தால் பிறக்கக்கூடும். ஆதலால் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

---

## செங்கல்பட்டுஜில்லா!

### தஞ்சையா? சேலமா?

தமிழ் நாட்டில் உள்ள 11 ஜில்லாக்களில் செங்கல்பட்டு ஜில்லா தவிர மற்றஜில்லாக்களில் எல்லாம் 1000 மெம்பர்களுக்கு மேல் 4500 மெம்பர்கள் வரை சேர்க்கப்பட்டாய் விட்டது. செங்கல்பட்டு ஜில்லா அதுவும் தோழர் டி. ஷண்முகம் [ஜில்லா போர்டு பிரசிடெண்டு] அவர்களும் தோழர் சி. என். அண்ணாதுரை [ஜஸ்டிஸ் கட்சிக் காரியதரிசி] அவர்களும் இருக்கும் ஜில்லாவாகிய செங்கல்பட்டு ஜில்லாவில் மாத்திரம் 400 மெம்பர்கள்கூட அதுவும் சேலம் மகாநாடு நடந்து 6 மாத காலமாகியும் 500 மெம்பர்கள்கூட சேர்க்கப்படாமல் இருக்கின்றது என்றால் இதைப் பற்றி என்ன நினைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. இதைப் பற்றி பல தடவை எடுத்துக்காட்டியும், கடந்த இரண்டு மாத காலமாக அங்கத்தினர் எண்ணிக்கை சிறிதும் வளராமல் கல்லுப்போல், இருந்துவருகிறது. கல்லைக்கூட வளருகிறது என்று சொல்லுவார்கள். ஆனால் செங்கல்பட்டுக்கு வளர்ச்சி ஜாடைகூடக் காணப்படவில்லை.

செங்கல்பட்டு ஜில்லாவுக்குக்கூட முன்னை போடவேண்டுமானால்; சன்னை போடும் அசையவில்லையானால் நமக்கு உதவி செய்யவோ, நம்மோடு சேர்ந்து ஒத்துழைக்கவோ வேறு எந்த ஜில்லாவில் யார் இருக்கிறார்கள் என்று எண்ணுவது ஒரு போட்டிப் பரிசு பிரச்சினையாகவே இருக்கிறது. திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்கள் ஒரு மூச்சில் (ஒரு வேண்டுகோளில்) பள்ளத்தில் இருந்து மேடு ஏறிவிட்டன. வடஆற்காடு ஜில்லாவும் தானாகவே குறைந்த அளவு எல்லையை தாண்டிவிட்டது. சேலம் ஜில்லா சென்ற மாதத்திய ஒரு வேண்டுகோளில் 320-லிருந்து 4200-க்கு வந்து கூடிய சீக்கிரத்தில் தஞ்சையைத் தாண்டிவிடுவதோடல்லாமல் தமிழ்நாட்டில் தலைமை ஸ்தானம் பெற்றுவிடும் என்றே சொல்லலாம். கோவை ஒரு கோபத்தில் முதல் இடம் பெறுவதென்று முடிவு செய்து கொண்டது. இப்படியெல்லாம் இருக்க "கோவில் பூனை தேவர்க்கு அஞ்சாது" என்பது போல் செங்கல்பட்டு ஜில்லா மாத்திரம் சிறிதும் சிந்தனை இல்லாமல் 488 என்கிற பாதாள பள்ளத்தில் இருந்து கொஞ்சமும் தலைதூக்காமல் மூர்ச்சையாகிக் கிடப்பது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது.

இதுவரை செங்கல்பட்டு ஜில்லாவுக்கு அனுப்பப்பட்ட அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகம் 80-தே தான் ஆகும். இவற்றில் 2000 ரசீதுகள் தான் இருக்கும். இதற்கும் 438 அங்கத்தினர்கள் மாத்திரம், அதுவும் தோழர் டி. பி. எஸ். பொன்னப்பன் அவர்களால் சேர்த்து அனுப்பப்பட்டது 375 போக 100 அங்கத்தினர்தான் மற்ற 2, 3 பேர்களால் அனுப்பப்பட்டிருக்கின்றன.

செங்கல்பட்டு ஜில்லா போலவே தான் சென்னையும் மிகக்குறைந்த அளவில் அதாவது 1700-க்குள் இருக்கின்றது. சென்னை 10 லட்சம் மக்கள் கொண்ட நகரம். அங்கு திராவிடர் கழகக் கூட்டம் தவிர மற்றக் கூட்டங்கள் சினிமா, நாடகம் பாட்டுக்கச்சேரி ஆகிய

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

லைகளுக்குத்தான் மக்கள் சேருகிறார்களே ஒழிய மற்ற எந்தக் கட்சி கூட்டங்களுக்கும் சரியான அதிப்போ மக்கள் கூடுவதோ இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட செல்வாக்கு உள்ள அங்கு சேர்ந்திருக்கும் அங்கத்தினர்கள் 1700தான் என்றால் இதற்கு மக்கள்மீது அவநம்பிக்கை கொள்ளுவதா அல்லது இயக்கத் தோழர்கள் கோவில் பூனைகளாக இருக்கிறார்களா என்பது நமக்கு விளங்கவில்லை. நம்முடைய ஆசையெல்லாம் சென்னை அங்கத்தினர்கள் எண்ணிக்கைதான் போட்டியில் முதல் இடம் பெறவேண்டும் என்பதாகும். ஆனால் அங்கு நமக்கு புத்தி சொல்லுகிறவர்கள்தான் அதிகம் பேராக இருக்கிறார்களே தவிர அதற்கேற்ற பெருமையை உரிமையைக் காட்டுகிறவர்கள் குறைவாக இருந்துவருகிறார்கள். சென்னை ஒரு பெரியநகரமாகவே இருப்பதால் அங்கு பொதுநல உணர்ச்சி உள்ளவர்கள் மிகமிகக் கொஞ்சமாகத்தான் இருக்கமுடியும். அதிலும் புத்தி சொல்லக் கூடியவர்களுக்கு வேலை செய்வது என்பது வேப்பங்காய் மாதிரிதான் இருக்கும். இது இயற்கையே ஆகும். அநேகமாக பெரு நகரங்களில் அவரவர்கள் சமயலும், தந்திரமுமே அவர்களது முழு நேரத்தையும், முழு கவனத்தையும் அடிமைகொண்டு விடுவதால் சாக்குப்போக்கிலும், நம்மீது குற்றம் பேசுவதிலும், காலம் கழித்துத் தப்பித்துக்கொள்ள வேண்டியதாகி விடுகிறது. நாட்டுப்புறத்திற்கும், நகரத்திற்கும் இந்த வித்தியாசமாவது இருக்க வேண்டாமா?, என்றாலும் சென்னையில் தக்க ஸ்தாபனங்கள் சரியாய் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். செங்கல்பட்டில் அதுகூட இல்லாமல் இருப்பது பரிதபிக்கத் தக்கதாகும். முடிவில் யாராவது கூடியபோது கடைசியாக இருப்பது சென்னையா? செங்கல்பட்டா? என்பது ஒருபுறமிருந்தாலும் முதலிடம் பெறுவது சேலமா? தஞ்சையா? கோவையா? என்பது இப்போது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருக்கிறது என்னை இந்த மூன்று [சேலம்-தஞ்சை-கோவை] ஜில்லாக்காரரும் உணர வேண்டுகிறோம்.

# திருச்சி ஹரிஜன ஹாஸ்டல் நீதி!

## 35 மாணவர்கள் வெளியேற்றம்

### உணவில்லாமல் தெருவில் திண்டாட்டம்

திருச்சி, பிப்ரவரி, 2-

திருச்சி ஹரிஜன ஹாஸ்டலிலிருந்து, காலேஜ் வகுப்புகளில் வாசித்து வந்த 15 மாணவர்களும், ஹைஸ்கூல் வகுப்புகளில் வாசித்து வந்த 20 மாணவர்களும் ஆக 35 பேர்கள் திடீரென வெளியேற்றப்பட்டு விட்டனர். இதனால் அடுத்த மாதத்தில் வருடாந்திர பரீட்சை எழுதுவதும் கெட்டுவிடும் அபாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 15 காலேஜ் மாணவர்கள் விளக்குமாறு வாங்கிவர மறுத்த குற்றத்திற்காகவும், அதற்கு உடந்தையாயிருந்ததற்காகவும் உணவில்லாமல் தெருவில் நிற்கவேண்டிய இந்த விபரீத நிலைமை ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. பத்தாம் வகுப்புக்குக் கீழ் வகுப்புகளைச் சேர்ந்த 20 மாணவர்கள் ஒரு குற்றமிழைக்கும் காரணமாயில்லை என்றாலும், மேற்படியுள்ள 'விளக்குமாறு குற்ற' மாணவர்களைத் தொடர்ந்து நடந்து கொள்ளுவதில்லை என பெற்றோர்களிடம் எச்சரிக்கையாய் முச்சலிக்கா கடிதம், வாங்கிவர வேண்டுமென்று ஹரிஜன் ஹாஸ்டல் சத்திர அதிகாரியின் மற்றொரு தாக்கீதால் ஹாஸ்டல் உணவளிப்பு மூடப்பட்டது.

பரீட்சை சமயத்தில் இப்படிச் செய்வது மிகவும் அநீதியாகுமென்று காரியதரிசி எல். என். கோபாலசாமி அய்யரிடம் ஜில்லா அடிஷனல் மேஜிஸ்திரேட் தோழர் ஆர். எஸ். மலையப்பன் அவர்கள் செய்த முயற்சியும், வேண்டுகோளும் வியர்த்தமாகி இந்தக் கொடுமை தலைகாட்டியிருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

ஹரிஜன சேவா சங்கங்கள் லட்சக்கணக்காய் மத்திய—மாகாண சர்க்கார் மானியங்களின் உதவியில் நடப்பதால் சர்க்கார் தலையிட்டு அவசியம் என ஜில்லா கலெக்டர், ஜில்லா லேபர் ஆபீஸர், மாகாண லேபர் கமிஷனர் ஆகியவர்களுக்கும், மற்றும் அம்பேத்கார் போன்ற தலைவர்களுக்கும் விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஹாஸ்டல் கமிட்டியின் அங்கம் வகிக்கும் தோழர் சிவபிச்சை, மருதை ஆகியவர்கள் பதவிகளை ராஜீநாமாச் செய்யவும், ஹாஸ்டல் நிர்வாகச் செய்கையைக் கண்டிக்கவும் ஆவன மேற்கொள்ளவும் திருச்சி இக்கூட்டங்களில் பொதுக் கூட்டமொன்று நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்.

2-2-45 பிரயாணம்.
தென்னார்க்காடு ஜில்லா
3– பண்ருட்டி
4– திண்டிவனம்
5– மதராஸ்
வட ஆற்காடு ஜில்லா
6– சோப்பனந்தேல் (சங்கம் தாலூகா)
7– திருவண்ணாமலை
8– வேலூர் (N. A)
சேலம் ஜில்லா
9– அரூர் (சேலம் ஜில்லா)
10– அநுகாரப்பட்டி
11– பென்னாகரம்
12– தர்மபுரி
13– கிருஷ்ணகிரி
14– பிரயாணம்
15– ஈரோடு.

இவற்றில் தேதி ஏதாவது முன் பின் மாறலாம்.

# மதுரை நகர் 'திராவிடர் கழகம்' திறப்பு விழா

அன்புடையீர்!

நாளது 11-2-45 ஞாயிறு வர்த்தக விடுமுறைநாளன்று மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் காலை 9½ மணிக்கு மதுரை நகர் திராவிடர் கழகம் திறப்பு விழா நடைபெறும்.

அவ்வமயம் டை கழகத்திற்கு நிர்வாக உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறும். எல்லா அங்கத்தினர்களும் இதையே அழைப்பாகக்கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

வி. ருத்திரளாண்டி,
அமைப்பாளர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# பெரியாரின் பேட்ஜ்

நமது பெரியாரின் உருவம் அமைந்த பேட்ஜ் அழகிய கலரில் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0-1-0 தேவைக்கு எழுதுக.
நமது இயக்க எல்லா பத்திரிகை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)


## இந்து சட்ட திருத்தம்

### சென்னையில் பொதுக் கூட்டம்

சென்னைமாவட்ட பொது மக்களின் மாபெருங் கூட்டம் 5-2-45 திங்கள் மாலை 6-15 மணிக்கு கோகலே மண்டபத்தில் நடைபெறும்.

ரிடயர்ட் ஜில்லா & செஷன்ஸ் நீதிபதி தோழர் ய. சக்ரபாணி நாயுடு அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர்கள் எஸ். முத்தய்யா முதலியார் பி. ஏ., பி. எல்., பெரியார் ஈ. வெ. ரா., எஸ். லட்சுமிரதன் பாரதி எம். ஏ., பி. எல்., எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்., சி. என். அண்ணாதுரை எம். ஏ., ஏ. டி. எஸ் சாமி பி. ஏ., பி. எல்., இந்திராணி பாலசுப்ரமணியம், குஞ்சிதம்குருசாமி பி. ஏ., எல். டி., டாக்டர் தருமாம்பாள், எம். எஸ். சத்யவாணி முத்து ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

அனைவரும் பெருந்திரளாக வருக!

எஸ். ஜி. ரங்கராமானுஜம்,
பார்-அட்-லா.
டி. சண்முகம்,
செங்கற்பட்டு மாவட்டத் தலைவர்.
ஆர்கனைசர்கள்.

## சேலத்தில் தோழர் S. இராமநாதன்

(ஒரு நிருபர்)

சேலம், பிப். 1—

31-1-45 தேதி புதன்கிழமை காலை 9-மணிக்கு மாஜி அமைச்சர் தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் ராஜேந்திரா சத்திரத்திலிருந்து ஊர்வலமாக செவ்வாய்ப்பேட்டை பல முக்கிய தெருவழியாக அழைத்துச்செல்லப்பட்டார். வழிநெடுகப் பொதுமக்களால் மலர்மாலையிட்டு வரவேற்கப்பட்டார். தேவாங்க பாடசாலை மண்டபத்தில் சேலம் சு. ம. சங்கத் தலைவர் தோழர் எம். ஆர். சித்தையன் அவர்கள் தலைமையில் நகர திராவிட கழகம், செவ்வாய்ப்பேட்டை, அரிசிபாளையம் திராவிட கழகங்கள், பெரியார் சங்கம், சுயமரியாதை சங்கம் ஆகியவைகள் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தன. அவைகளுக்கெல்லாம் பதில் அளிக்குமுறையில் தோழர் இராமநாதன் அவர்கள், உலகத்திலேயே சுயமரியாதை இயக்கந்தான் என்றும் நின்று நிலைக்கக்கூடியதென்றும் அதன் கொள்கைகளை, இந்தியா என்ன? உலகமே ஏற்றுக்கொள்ளக் கூடியதென்றும் அதற்கான உருவான வேலைகளை நாம் அனைவரும் சேர்ந்து செய்யவேண்டுமென்றும்; காந்தியக் கொடுமைகளையும் அதன் தீமைகளையும் ஒழிக்கவேண்டுமென்றும், அவைகள் எதிர்காலத்தில் மடிவது நிச்சயமென்றும், யுத்தத்திற்குப் பின் புனருத்தாரணத்தில் திராவிடர்களாகிய நாம் கவனம்செலுத்தி நல்ல திட்டங்களை இப்பொழுதே அமைக்கவேண்டுமென்றும், திராவிட நாடு திராவிடருக்கு பெறுவது எளிது என்றும், பெற்றே தீருவோம் என்றும், தேசீயம், தேச பக்தி முதலிய வேஷங்களைக் களைந்துவிட்டு மக்கள் சமுதாயம் முன்னேற வேலை செய்வதுதான் சேவை என்றும், தற்போது வெளிப்படையாகப் பார்ப்பனர்கள் தங்களுக்கென ஒரு சங்கம் அமைத்துக்கொள்வது திராவிடர்களுக்குப் பெரும் வெற்றிக் குறி என்றும் விரிவாகப் பேசினார். எழுதியனுப்பிய கேள்விகளுக்குத் தக்கவாறு பதிலளித்தார்.

பிறகு அவர் தோழர் வ. சங்கரனில்லத்தில் உணவுண்டபின் நகர முக்கியஸ்தர்கள் பலர் வந்து பார்த்துப் பேசினர். மாலை 5 மணிக்கு சேலம் கல்லூரி ஹாலில் ஆங்கில பேராசிரியர் தோழர் அச்சுதன் நாயர் எம். ஏ., அவர்கள் தலைமையில் காந்தியக் கெடுதல்கள், காங்கரஸ் தலைவர்களின் தெகிடுதத்தம் என்பவைகளை சுமார் 1-30 மணி நேரம் விளக்கமாக ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். பிறகு மாலை 7-30 மணிக்கு மார்க்கெட் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் தோழர் கே. ஜகதீச செட்டியார் தலைமையில் கைத்தறி நெசவாளர்கள், தொழிலாளிகள் குறைகள், அவர்களது எதிர்காலம் பற்றி சொற்பொழிவாற்றினார். நெசவுத் தொழிலாளர்களைப் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இரவு 9-30 மணிக்கு இனிது கூட்டம் கலைந்தது.

## பெரியகுளம் மணி வாசக மன்றம்

ஷை மன்றத்தின் ஆதரவில் 4-2-45-ந் தேதி சமுதாயம் என்பது பற்றிப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திருச்சியில் மிராசுதார்கள் மகாநாடு

ஷை மாநாடு திருச்சியில் 5-2-45-ஆம் தேதி பழையகோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## பாராட்டு

லாஹூர், கிருஷ்ணா நகர் ஜட்பட் தோரக் மண்டல மாஜிக் காரியதரிசி தோழர் ஹர்பகவான் அவர்களும், சாமி தர்ம தீர்த்தாஜி மஹாராஜ் பி. ஏ., எல். எல். பி., அவர்களும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சேவையைப் பாராட்டி இப்புத்தாண்டில் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

"தங்களின் போற்றத்தகுந்த நடவடிக்கைகளைப் பற்றி வாசிக்கும்போதெல்லாம் நாங்கள் பெருமகிழ்வெய்துகிறோம். நாட்டுக்கும், மனித சமுதாயத்திற்கும் தங்களின் உழைப்பு உதவ நீங்கள் நீண்ட நாள் உயிருடன் வாழவிழைகிறோம். இப்புத்தாண்டில் தங்களுக்கு இதனையே எங்களது மனங்கனிந்த நற்பணியாக அளிக்கிறோம்."

## கதிரியார் மறைவு

ஓமலூர், ஜன. 28-

நீண்ட நாள் ஜஸ்டிஸ் கட்சியாளரும், ஓமலூர் தாலூகா திராவிடர் கழக முக்கியஸ்தருமான தோழர் டி. வி. கதிரிசெட்டியார் தமது 57 வது வயதில் 26-1-45 இரவு12மணிக்குமேல் மரணமடைந்தார்.

நேற்று பிற்பகல் அவரது பிரேதம் திராவிடக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில், ஏராளமான மக்கள் சூழ இயக்கத் தோழர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. தெருவில் பல அன்பர்கள் மலர் மாலையிட்டு மரியாதை காட்டினர். மாலை 5 மணிக்கு அடக்கம் முடிந்தது.

பிற்பட்ட வகுப்பார், கல்வி நல மற்றோர், நெசவுத் தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்காகவும், ஊர் நன்மைக்கான முக்கிய காரியங்களில் அரும்பணி தந்த ஏழை பங்காளர் தோழர் கதிரியாரின் மறைவுக்குக் கட்சி பேதமற்று எல்லோரும் வருத்தம் தெரிவித்தனர்.

## திருமணம்

அரூர் பென்ஷனர் தோழர் ஏன். வடிவேலு முதலியாரின் தம்பி தோழர் நா. விநாயகத்திற்கும் தோழர் குணபூஷணம் அம்மையாருக்கும் 9-2-45-ஆம் தேதி காலை 9 மணிக்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கோயில் பார்ப்பனர்களும், திராவிடர்களே என்று சரித்திரப் பெரியர் சொல்லப் பிரியப்பட்டு அறுவகைப் பார்ப்பனரில் ஒரு வகையினர் அவர் என எடுத்துக் காட்டுவாரானால் அவ நடை சொற்றொடரே அவரை இழுத்துநிறுத்தி 'என்னைக்காண்' என்று இயம்பிடும். "திராவிடர்கள் தான் விக்கிரக வழிபாட்டினையும், மத நம்பிக்கையினையும் எங்கள் மீது சுமத்தினார்கள் என்று பிராமணச் சுயமரியாதைக்காரன் சொல்வதற்கும் சரித்திர நியாயம் இருக்கத்தான் செய்கிறது" என்கிறார். சுயமரியாதைப் பார்ப்பானைத் தவிர பிறரெல்லாம் இதனை ஏற்கார். மற்றும் 'எங்கள் மீது' என்று எவரைக் குறிப்பிடப்படுகின்றாரோ அவர்கள் திராவிடரல்லாதார் என்று ஒப்புக் கொள்கிறார். திராவிடர்கள் தங்கள் மீது சுமத்தினார்கள் என்று பிரித்துக் காட்டிக் குற்றஞ் சுமத்துவதின் மூலம் அவ்வாறு குற்றஞ் சுமத்துகின்ற உள்ளம் படைத்தோரும், அவரைச்சார்ந்தோருமே ஆரியர்கள் என்று வரலாறு கூறுகிறது. அக்கருத்து இவருடைய உள்ளத்திலும் மொழியிலும் ஆழ்ந்திருப்பதை இத்தொடர் தெரிவிக்கவில்லையா?

திருவினை அடைமொழியாக்கி தமிழர் அகமகிழ நினைத்தால் 'ஸ்ரீ' என்ற வடமொழியை வற்புறுத்தியது யார்? 'புலவர்' என்ற தமிழ்ச் சொல்வழக்கொழிக்கவும், 'வித்வான்' என்ற பட்டம் வழங்கவும் விரும்புவது யார்? தமிழ்ப் படிப்பு என்றாலே வடமொழியும் படிக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தவர் யார்? பழமலையை விருத்தாசலமாகவும், மறைக்காட்டை வேதாரண்யமாகவும், மயிலாடுதுறையை மாயூரமாகவும், குடந்தையைக் கும்பகோணமாகவும் மாற்றத் தலைப்பட்டோர் யார்? தமிழகத்தில் தமிழிசை வளர வேண்டுமென்று வள்ளல், அண்ணாமலையும் பிறரும் கொண்ட கருத்தினை மறுத்து மார்தட்டி முன்வரத் துணிந்தோர் யார்? இக்குச் சட்டத்தில் ஒருகுலத்துக் கொரு நீதியென்ற முறையைக் கொண்ட மனுநீதியும், சுக்கிர நீதியும், கௌடல்யர் நீதியும் இடம் பெற்றிருப்பதையும், பெண்ணுரிமை பாழாவதையும், இவைகளைச் சீர்திருத்த முன்வந்துள்ள ராவ் குழுவினரின் போக்கை, எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்ளுகின்றவர் யார்? இவைகளுக்கெல்லாம் முதலிடம் தந்து விளம்பரம் செய்கின்றவர்கள் யார்? 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியராய் இருந்த காசா சுப்பாராவ் அவர்கள் துணிவுடன் தெரிவித்ததுபோல இந்நாட்டுச் செய்தித்தாள்கள் யாவும் பார்ப்பனர்களையே ஆசிரியர்களாகக் கொண்டு அவ்வினத்தார்களுக்கே விளம்பரம் தருவதால் ஏற்படும் புகழ்ச்சலுக்கு அடிப்படை யார்? நாட்டுரிமை இயக்கத்தின் பெயரால் பெருந் தலைவர்களாய் அமைந்து தனது இனத்தாரின் முன்னேற்றத்திற்கே இயக்கத்தைப் பயன்படுத்திக் குற்றச்சாட்டிற்கு உள்ளானவர்கள் யார்? அரசியல் பதவிப்பித்தர்கள் என்று இந்நாட்டு மக்களைச் சொல்லி நூற்றுக்கு மூவராய் அமைந்த மக்கள் நூற்றுக்கு அறுபது இடங்களுக்கு மேல் தாங்களே அமைய வழி செய்துகொண்டவர்கள் யார்? மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும், பிர்மா படைத்ததன் பெயராலும், கீதையின் விளக்கத்தாலும், இந்நாட்டு மக்களை மடையராக்கித் தாம் வாழ வழிசெய்துகொண்டவர்கள் யார்? மக்கள் மனக்கருத்தை—உயர்ந்த உள்ளத்தை உழுத்தர்களின் வணிக மனையாக மாற்றியமைத்தோர் யார்? பஞ்சத்திற்கும் தாழ்மைக்கும் தலைவணங்கும் நிலையைத் தோற்றுவித்தோர் யார்? அமாவாசையும், திதியும் வருவாயினைப் பெருவதற்கு வழியுள்ள நாட்கள் என்று கொண்டோர் யார்? யார்? என்று நாம் கேட்பது கேளாக் காதருக்கும் கேட்கும் காலம் இதுவாகும். அந்த வேற்றுமையை வளர்க்கும் வேதியக் கூட்டத்தாரே 'ஆரியர்' என்று இனப்பெயரால் அழைக்கப்படுவோர். காணக்கண்ணிருந்தால் இவை காண இயலாதன வல்ல, காணக்கூடாததுமல்ல என்பதனையாவது சரித்திரப் பெரியர் உணரக்கூடும். உணர்ச்சியிழந்து உயிரற்றது எனப் பிறரால் கருதப்படும் 'சரித்திரப் பெரியர்' அதற்கு சான்றாகக் கூடாது என்பதே நமது விழைவு. 'த-உ'

# வேண்டுகோள்

## மருத்துவத் தோழர்களுக்கு

காரைக்குடி மருத்துவகுலத் தோழர் கே. பி. ராமநாதன் விடுத்துள்ள வேண்டுகோளில், மதுரை, திருச்சி, கரூர் போன்ற இடங்களைப் பார்த்தாவது, இதுவரை சங்கங்கள் வைத்துக் கூடிக் கலைந்தது போல் இல்லாமல் காரைக்குடி தோழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து செயலாற்ற வருமாறு வேண்டிக் கொள்கிறார்.

* *

நாகை தோழர் எஸ். பி. சாமி அவர்கள் விடுத்த வேண்டுகோளில், "உங்களில் சிலர் ஏன் திராவிட கழகத்தில் சேரவேண்டும் என்று கேட்கின்றார்கள். என்ன அறியாமை? எவ்வளவு பேதமை? இவர்களுக்குத் தன் நாட்டுப் பற்று கொஞ்சமேனும் இல்லையா? நம் நாடு நம்முடையது என்றுணர்ந்தும் இவர்கள் இவ்வாறு இருக்கலாமா?" என்றும், பகுத்தறிவுடன் வாழ முற்படுங்கள்; பழையப்போன புராணத்தின்பால் சிறிதேனும் நம்பிக்கை வைக்காதீர்கள் என்றும், "திராவிட முழக்கம் தரணியில் எங்கும் முழங்குகிறது பல்லாயிரக்கணக்கானோர்கள் திராவிட கழகத்தில் உறுப்பினர்களாகச் சேருகின்றனர் ...... திராவிட மருத்துவப் பெருங்குடி மக்களே! நீங்கள் இனி என்னசெய்யப்போகிறீர்கள்? இன்றே சேருங்கள் திராவிடக் கழகத்தில்; காட்டுங்கள் உங்களின் அங்கத்தினர் 'எண்ணிக்கையை'" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## கோவை எஸ். காசிம்

கோவை தோழர் எஸ். காசிம் ஜனவரி மாதம் இறுதியில் ராமநாதபுரம், தஞ்சாவூர், சேலம் ஆகிய ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து இயக்கப் பிரசாரஞ் செய்வார் எனத் தெரிகிறது.

## அறிவிப்பு

"குடி அரசு" பத்திரிகையின் விற்பனை ஏஜண்டுகளாக கீழ்க் கண்டவர்களை நியமனம் செய்திருக்கிறோம். பத்திரிகை தேவையுள்ளவர்கள் பெற்றுக்கொள்ளலாம்:

(1) செ. சந்தகோபால்,
26 பாண்டிரோடு,
பீமநாயக்கன் தோப்பு,
விழுப்புரம்.

(2) டி. கி. கோவிந்தராஜுலு,
நியூஸ் ஏஜண்டு,
பஸ் ஸ்டேண்டு,
தர்மபுரி.

மானேஜர்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## மதிப்புரைகள்:

### "சிறுவர் அறிவுக் கதிர்"

ஆசிரியர்: கெ. ஜெ. வேதமுத்து.
விலை 0—10—0.
கிடைக்குமிடம்: சிறுவர் அறிவுக் கதிர் நிலையம், ஈரோடு.

மேற்படி இதழின் கிறிஸ்துமஸ் மலர் ஒன்று வரப்பெற்றோம். இச்சஞ்சிகை கடந்த 10-வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது. மாணவர்களுக்கு மாதாமாதம் நல்லறிவு விருந்தளிக்கிறதென்றே கூறலாம். சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், அவர்களது ஓய்வு நேரத்தை நல்ல வழியில் கழிப்பதற்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது நமது கருத்து. பள்ளி மாணவ மாணவிகள் கைகளில் இச் சஞ்சிகை இருக்கவேண்டியது அவசியமாகும்.

### "கற்றாழை நாரினால் பிரஷ் செய்தல்"

ஆசிரியர்: எம். சக்கரவர்த்தி நைனார்.
கிடைக்குமிடம்: குடிசைத்தொழில் பதிப்பகம், கொழப்பலூர் போஸ்ட், ஆரணி (N A)
விலை: அணா 6

மேற்படி புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். கற்றாழை நாரினால் எவ்வாறு பல் வகையான பிரஷ்கள் செய்யலாம் என்பதை யாவரும் எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்லும் வகையில் ஆசிரியர் எழுதியுள்ளார். இப் புத்தகத்தைப் படிக்கிற ஒவ்வொருவரும் "நாமும் முயன்று பார்க்கலாமே" என்றுதான் எண்ணுவார்கள். ஆனால், உலகில் எல்லாத்தொழில்களும் விஞ்ஞானத்தின் உதவிகொண்டு மனிதனுடைய உழைப்பு அதிகமில்லாமலே எளிதாக பன்மடங்கு அதிகமான உற்பத்தியை அளித்துவருகின்றன. குறைந்த உழைப்பினால் அதிக லாபத்தைப்பெற்று வாழ்க்கை நிலையை உயர்த்தி வருகையில், நம் நாட்டில் மட்டும் கையால் செய்யும் தொழிலே இன்னும் இருக்கவேண்டும், இங்கே மக்கள் மாடுபோல் உழைத்து அரைவயிறு கஞ்சியாவது குடித்து உயிர்வாழ வேண்டும் என்ற நிலைக்கு இருக்க வேண்டுமெனால்; இது புத்திசாலித்தனமான காரியமா என்று எண்ணிப்பார்க்கையில் இத்தகைய புத்தகங்கள் வரவேற்கக்கூடியவைகளா என்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

### "வெற்றி"

திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரியிலிருந்து டாக்டர் வெற்றி என். பழனியப் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "வெற்றி" என்னும் மாதம் இருமுறை வெளிவரும் இதழ் ஒன்று வரப்பெற்றோம். சர்வ கட்சி தமிழர் பத்திரிகை என்று அதன் முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கிறது. சர்வ கட்சி தமிழ்ப் பத்திரிகை என்று பொறித்தால் தான் பொருத்தமாகயிருக்கும் அதின் கண்வரும் செய்திகளுக்கு.
தனிப்பிரதி விலை அரையணா.

### "மூவேந்தர்"

மதுரையிலிருந்து தோழர் சிவனாண்டித் தேவர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "மூவேந்தர்" என்ற இதழ் ஒன்று வரப்பெற்றோம். முக்குல மக்களாகிய கள்ளர்-மறவர்-அகம்படியர் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதாக அறியக்கிடக்கிறது. ஆனால், எதன் காரணமாக முன்னேற்றம் தடைபட்டிருக்கிறதோ அதே காரணத்தை இவ்விதழ் ஒழித்ததாகத் தெரியவில்லை. இவ்விதழின் முன்பக்கத்தில் 'பரிசுத்த' ஆவியும், சிரார்த்தத்தின் மேன்மையும் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரை இதன் போக்கை நன்கு விளக்கும். இதே போக்கில் போய்கொண்டிருந்தால், நன்மைக்குப் பதிலாகத் தீமையே விளையும். இவைகளை எண்ணிப் பார்த்து உண்மையிலே பிற்படுத்தப் பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் என்று எதிர்பார்க்கிறோம்.

### பொங்கல் மலர்

தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத்தாரும், கரந்தை மறுமலர்ச்சி மன்றத்தாரும் அனுப்பப்பட்ட பொங்கல் மலர் வரப்பெற்றோம். புரட்சிக் கவி, பாரதிதாசன் அவர்களின் 'இன்பத் தமிழ்', மலருக்கு இனிமையைத் தருகிறது.

### வரப்பெற்றோம்

திருச்சி ரங்கன் மூயல்மார்க் பெயிக்கல் வைரவியாபாரம் அ. மு. க. அண்டு பிரதர்ஸால் அனுப்பப்பட்ட வர்ணப் படங்கள் பொறிக்கப்பட்ட இரு காலண்டர்கள் வரப்பெற்றோம்.

* *

கடலூர் ஓ. டி. அண்டு என். டி. இந்தியன் 'எக்ஸ்பிரஸ், தினமணி' ஏஜண்டு தோழர் கெ. வி. கார்த்திகேயனால் அனுப்பப்பட்ட 'ஷீட்' காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

* *

திருநெல்வேலி ஜில்லா, நாங்குநேரி 'வெற்றி' நிலையத்தார் வெளியிட்ட இரு கலர் படக்காலண்டர்கள் வரப்பெற்றோம்.

* *

சென்னை, பழனிக்கார்த் தெருவிலுள்ள வைணவசித்தாந்த அச்சியந்திர கழகத்தாரால் அனுப்பப்பட்ட திருக்குறள் நாட்குறிப்புப் புத்தகம் ஒன்று வரப்பெற்றோம்.

* *

சென்னை "மெயில்" பத்திரிகை காரியாலயத்தார் வெளியிட்ட 'ஷீட்' காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

## திருப்பதியில் இருவர் கைது

### பிரார்த்தனைப் பணத்தை கையாடினராம்

திருப்பதி, ஜன. 18—

ராஜகோபாலன் என்பவரையும், யோகானந்த தீக்ஷிதர் என்ற அர்ச்சகரையும் திருமலை போலீசார் கைதுசெய்தனர். இவர்கள், அய்யம்பேட்டை ஜெயராமன் என்பவரிடமிருந்து சுவாமிக்கு சமர்ப்பிக்கவிருந்த 2-சவரன் (பவுன்) நகையை வாங்கிக்கொண்டு சுவாமிக்கு சமர்ப்பிக்காமல் ஏமாற்றிவிட்டனராம்.

---

## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 4 அணா புத்தகங்கள்

இராமாயண ஆராய்ச்சி
" பால காண்டம்
" ஆரண்ய காண்டம்
" கிட்கிந்தா காண்டம்
பெண் ஏன் அடிமையானாள்? (ஈ-வெ-ரா)
பகுத்தறிவு அல்லது மரண சாஸனம் முதல் பாகம்
ஷை இரண்டாம் பாகம்
மதப்புரட்சி
வால்டேயரின் வாழ்க்கைச் சரிதம்
விவாக விடுதலை
பரிணாமவாதம்
இந்தியமாதா
பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை
இங்கர்சால் பொன்மொழிகள்
ஜாதியை ஒழிக்கவழி (டாக்டர் அம்பத்கார் எழுதியது)
சோதிட ஆராய்ச்சி (ஈ. வெ. ரா.)
பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)
கடவுளும், பிரபஞ்சமும்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery Street, Erode.